## சுருக்கம்

நிலம்– ஆவடி நகராட்சி– பருத்திப்பட்டு கிராமம் புல எண்.713/1பி1–ல் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 46,483 சதுர அடி பரப்பளவுள்ள எம்.ஆர்.மனை எண்.330–ஐ ஆவடி நகராட்சியின் சேமிப்பிலுள்ள பொது நிதியிலிருந்து ரூ.3,71,87,000/– செலுத்தி கிரயம் பெறுவதற்கு நிர்வாக அனுமதி (Administrative Approval) அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி5) துறை

அரசாணை (3D) எண். 27 நாள். 30.10.2007

படிக்கப்பட்டது:

நகராட்சிநிர்வாக ஆணையரின்கடித ந.கஎண்.6297/07/டிபி3, நாள். 11.10.2007.

---

ஆணை:

ஆவடி நகராட்சி அலுவலகம் போதிய இடவசதி இல்லாததால், பருத்திப்பட்டு கிராமம் புல எண்.713/1பி1–ல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைப்பிரிவில் பொது உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பில் புதிய அலுவலகக்கட்டிடம் கட்ட ஆவடி நகர்மன்றம் தனது 24.11.2006 நாளிட்ட தீர்மானம் எண். 293–இன் மூலம் அனுமதி வழங்கியுள்ளது.

2. மேற்படி இடமானது நகரின் மையப் பகுதியில் உள்ளதாலும், பேருந்து நிலையம், ரெயில் நிலையம் அருகில் இருப்பதாலும், பருத்திப்பட்டு கிராம சர்வே எண்.713/1பி1– இல், வீட்டு வசதி வாரியத்தின் ஒதுக்கீட்டிலுள்ள பொது உபயோகத்திற்கான எம்.ஆர்.மனை எண்.330–இல் 46,483 சதுர அடி பரப்பளவுள்ள இடத்தினை, வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்த மதிப்பு ரூ.3,71,87,000/–ஐ செலுத்தி, நகராட்சிக்கு கிரையம் பெறவும், மேலும் மேற்கண்ட தொகையினை வீட்டு வசதி வாரியத்திற்கு, நகராட்சியின் பொது நிதியில் இருந்து முழுமையாக செலுத்தவும், ஆவடி நகர்மன்ற சிறப்புக் கூட்டத் தீர்மான எண். 2, நாள். 28.9.2007–இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. ஆவடி நகராட்சிக்கு புதிய அலுவலக வளாகம் கட்ட, திருமங்கலம் ஆவடித் திட்டப்பகுதியில், பொது உபயோக எம்.ஆர்.மனை எண்.330–இல் 46,463 சதுர அடி பரப்புள்ள இடத்தினை, ரூ. 3,71,87,000/– க்கு ஒப்புதல் அளித்து, அத்தொகையை (18.7.2007–லிருந்து) ஒருமாத காலத்திற்குள் செலுத்தி ஒதுக்கீட்டு ஆணையினை பெற்றுக் கொள்ளுமாறு நகராட்சி ஆணையரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

4. ஆவடி நகராட்சி தற்போது இயங்கி வரும் அலுவலகம் போதிய இடவசதி இல்லாததாலும், வளர்ந்து வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டும் பருத்திப்பட்டு கிராமம் புல எண் 713/1பி1-ல் 46483 சதுர அடி பரப்பளவுள்ள, மனை எண்.330-க்கு வீட்டு வசதி பொறியாளர் நிர்ணயம் செய்த தொகை ரூ.371.67 இலட்சத்தினை நகராட்சியின் பொது சேமிப்பு நிதியிலிருந்து செலுத்தி, நகராட்சியால் கிரயம் பெற ஆவடி நகர்மன்றம் தனது 28.9.2007-ம் தேதிய தீர்மானம் எண்.2-இல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதன் அடிப்படையில், அதற்கான நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரை மற்றும் ஆவடி நகர்மன்றத் தீர்மானம் ஆகியவைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்து, பருத்திப்பட்டு கிராம புல எண். 713/1பி1-இல், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பொது உபயோகத்திற்கான 46,483 சதுர அடி உள்ள எம். ஆர். மனை எண். 330-ஐ ரூ.3,71,87,000/-(எழுத்தால் ரூபாய் மூன்று கோடியே எழுபத்தியொரு இலட்சத்து எண்பத்தேழாயிரம் மட்டும்) நகராட்சியின் சேமிப்பிலுள்ள பொது நிதியிலிருந்து செலுத்தி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து ஆவடி நகராட்சி கிரயம் பெற, நிர்வாக அனுமதி (Administrative Approval) அளித்து, அரசு இவ்வண் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -600 005.
ஆணையாளர், ஆவடி நகராட்சி, ஆவடி, சென்னை- 600 054.
(நகர்மன்றத் தலைவர் வழியாக) இரண்டு நகல்கள்.

நகல்:

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-600 035.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
நிதி (ந.நி(ம)கு.வ) துறை, சென்னை -600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை,
உதிரி நகல் / இருப்புக் கோப்பு

// ஆணைப்படி // அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 30/10/07

30-10-07